கோபிநாத சுவாமி கோயில் உறியடித் திருவிழா

திண்டுக்கல், ஆக. 29: ரெட்டியார் சத்திரம் கோபிநாத சுவாமி கோயிலில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு, உறியடித் திருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கடந்த திங்கள்கிழமை முதல் இந்தத் திருவிழா நடைபெற்று வருகிறது. ரெட்டியார்சத்திரம் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள 22 கிராமங்களில் உற்சவர் மலையப்ப சுவாமி 3 நாள்கள் வலம் வந்தார்.

பின்னர், கதிர் நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு வியாழக்கிழமை வந்தடைந்தார்.

வழுக்கு மரம்: இதைத் தொடர்ந்து, கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த 40 அடி உயர வழுக்கு மரம் ஏறும் நிகழ்வு நடைபெற்றது. பாரம் பரிய முறைப்படி வழுக்கு மரத்தில் ஏறிய வேலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மீது, கூடி நின்ற பக்தர்கள் தண்ணீரை பீய்ச்சி அடித்தனர். சுமார் 2 மணி நேர முயற்சிக்குப் பிறகு வழுக்கு மரத்தின் உச்சியிலிருந்த பரிசு முடிப்பை இளைஞர்கள் கைப்பற்றினர்.

பின்னர், உறியடித் திருவிழா நடைபெற்றது. உறி மரத்தில் 3 அடுக்குகளில் கட்டப்பட்டிருந்த தயிர், பால், பன்னீர் உள்ளிட்ட கலயங்கள், ஒவ்வொன்றாக அடித்து உடைக்கப்பட்டன. இறுதியாக உடைக்கப்பட்ட கலயத்திலிருந்த வெண்ணெய் பிரசாதமாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ரெட்டியார்சத்திரம் கோபிநாத சுவாமி கோயில் வளாகத்தில் வழுக்கு மரம் ஏறிய இளைஞர்கள்.

பள்ளியில் ஆதார் அட்டை திருத்த சிறப்பு முகாம்

உத்தமபாளையம், ஆக. 29: தேனி மாவட்டம், பண்ணைப்புரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கோம்பை தபால் நிலையம் சார்பில் ஆதார் அட்டை திருத்த சிறப்பு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, கல்வி உதவித் தொகை, பொதுத் தேர்வு ஆகியவற்றுக்கு ஆதார் அடையாள அட்டை அவசியம்.

இந்த நிலையில், பெரும்பான்மையான மாணவ, மாணவிகளின் ஆதார் அட்டையில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, பள்ளி வேலை நாள்களில் உத்தமபாளையம் ஆதார் மையத்துக்கோ, தபால் நிலையங்களுக்கோ செல்ல முடியவில்லை.

இந்த நிலையில், கோம்பை தபால் நிலையம் சார்பில் பண்ணைப்புரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு ஆதார் திருத்த முகாம் நடைபெற்றது. இதில், ஆதாரில் கைப்பேசி எண்ணை இணைத்தல், பெயர் திருத்தம், பிறந்த தேதி மாற்றம் என பல்வேறு திருத்தங்கள் செய்து மாணவ, மாணவிகள் பயனடைந்தனர்.

போடியில் தேங்காய் விலை உயர்வு

விவசாயிகள் மகிழ்ச்சி

போடி, ஆக. 29: போடியில் தேங்காய் வரத்து குறைந்து விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 6,000 ஏக்கருக்கும் மேல் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. இந்தப் பகுதியில் நாட்டு ரக தேங்காய் உற்பத்தி அதிகம். இங்குள்ள தென்னந்தோப்புகளில் சுமார் 48 நாள்களில் இருந்து 55 நாள்களுக்குள் காய்கள் பறிக்கப்படுகின்றன.

கடந்த சில மாதங்களாக தேங்காய் கொள்முதல் விலை தொடர்ந்து சரிவை சந்தித்து வந்த நிலையில், தற்போது அதன் வரத்து குறைந்துள்ளது. இந்த நிலையில், விநாயகர் சதுர்த்தி உள்ளிட்ட விழாக் காலம் தொடங்குவதால் ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு போடிநாயக்கனூரில் இருந்து மட்டை உரிக்கப்பட்ட தேங்காய் ஏற்றுமதியாகி வருகிறது. மேலும் காங்கேயம், பல்லடம் போன்ற பகுதிகளுக்கு போடியிலிருந்து கொப்பரை தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த 20 நாள்களுக்கு முன்பு வரை விவசாயிகளிடம் இருந்து மட்டை உரிக்கப்பட்ட தேங்காய் டன் ஒன்று ரூ. 23 ஆயிரம் முதல் ரூ. 24 ஆயிரம் வரை கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது விழாக் காலம் தொடங்குவதாலும் தேங்காய் வரத்து குறைந்திருப்பதாலும், டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் முதல் ரூ. 5 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது. இதில் மட்டை உரிக்கப்பட்ட தேங்காய் தரத்தைப் பொறுத்து டன் ஒன்றின் விலை ரூ. 28 ஆயிரம் முதல் ரூ. 29 ஆயிரம் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த 20 நாள்களுக்கு முன்பு வரை மட்டை உரிக்கப்படாத தேங்காய் ஒன்று ரூ. 9 முதல் ரூ. 10 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், தற்போது ரூ. 3 வரை விலை உயர்ந்து ரூ. 12 முதல் ரூ. 13 வரை விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யப்படுகிறது.

கடந்த மாதம் வரை தொடர்ந்து சரிவில் இருந்த தேங்காய் கொள்முதல் விலை தற்போது சற்று அதிகரித்து வந்தாலும் காய் உற்பத்தி குறைவு, உழவு செலவு, தோட்டத்துக்கு மருந்து, உரமிடுதல் செலவு, தேங்காய் இறக்கும் செலவு அனைத்தும் விவசாயிகளைச் சார்ந்தது என்பதால் குறிப்பிடும் அளவுக்கு லாபம் இல்லை. இருப்பினும், திருப்தியான விலை உயர்வு உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

போடியில் தேங்காய் மட்டைகளை தரம் பிரிக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள்.

2 நியாய விலைக் கடைகள் திறப்பு

செந்துறையில் புதிய நியாய விலைக் கடையைத் திறந்துவைத்து பயனாளிகளுக்கு பொருள்களை வழங்கிய முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன்.

நத்தம், அக். 29: நத்தம் அருகே உள்ள செந்துறை ஊராட்சியில் 2 புதிய நியாய விலைக் கடைகள், நாடக மேடை திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள செந்துறை ஊராட்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.39 லட்சத்தில் செந்துறை, ரெங்கசேர்வைக்காரன்பட்டியில் புதிய நியாய விலை கடைகள், பெரியூர்பட்டியில் நாடக மேடை ஆகியவை கட்டப்பட்டன. இவற்றை முன்னாள் அமைச்சரும், நத்தம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினருமான விசுவநாதன் தலைமை வகித்து திறந்துவைத்தார்.

முன்னதாக, ஊராட்சி மன்ற தலைவர் சவரிமுத்து வரவேற்றார். நத்தம் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.வி.என் கண்ணன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் எம். ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அரசுப் பள்ளி மாணவிகள் இருவர் மருத்துவப் படிப்புக்குத் தேர்வு

ஒட்டன்சத்திரம், ஆக. 29: ஒட்டன்சத்திரம் அருகே கிராமப்புற அரசுப் பள்ளியில் படித்த 2 மாணவிகள் 'நீட்' தேர்வு மூலம் மருத்துவப் படிப்புக்குத் தேர்வாகினர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள இடையகோட்டையைச் சேர்ந்த விவசாயி செல்லமுத்து-முத்துலட்சுமி தம்பதியின் மகள் பிரதீபா.

இதே ஊரில் உள்ள நேருஜி அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்த இவர் 'நீட்' தேர்வில் 551 மதிப்பெண்கள் பெற்று திண்டுக்கல் மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் முதலிடம் பிடித்தார். அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத உள் ஒதுக்கீடு அடிப்படையில் இவருக்கு கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது.

இதே பள்ளியில் படித்த இடையகோட்டைச் சேர்ந்த முகமது ரஷீத், சாஜிதா பர்வீன் தம்பதியின் மகள் ரவுலதுல் ஜன்னா 'நீட்' தேர்வில் 525மதிப்பெண்கள் பெற்று திண்டுக்கல் மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் இரண்டாமிடம் பெற்றார். இவருக்கு 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டின் கீழ் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது.

பிரதீபா

ரவுலதுல் ஜன்னா

இதுகுறித்து இருவரும் கூறியதாவது:

மருத்துவராக வேண்டும் என்பது எங்களது கனவாக இருந்தது. இந்தப் பள்ளியில் சனி, ஞாயிறு, விடுமுறை நாள்களில் சிறப்பாகப் பயிற்சி கொடுத்தனர்.

நீட் தேர்வில் முதலில் குறைவான மதிப்பெண் எடுத்ததால் தேர்ச்சி பெறவில்லை. எனினும், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் தொடர்ந்து ஊக்குவித்ததால் விடாமல் படித்து, 2-ஆவது முயற்சியில் 'நீட்' தேர்வில் வெற்றி பெற்று உள்ளோம். இதனால் எங்களது கனவு நனவாகி உள்ளது.

மருத்துவராகி கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு சேவை செய்வதே எங்களது நோக்கம் என்றனர்.

'நீட்' தேர்வில் வெற்றி பெற்ற இரு மாணவிகளுக்கும் இடையகோட்டை நேருஜி அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஜான்வில்பர் பொன்ராஜ் இனிப்பு வழங்கிப் பாராட்டினார்.

வெவ்வேறு விபத்துகளில் மூவர் உயிரிழப்பு

பழனி/ திண்டுக்கல், ஆக. 29: பழனி, வேடசந்தூர் பகுதிகளில் நிகழ்ந்த வெவ்வேறு சாலை விபத்துகளில் மூவர் உயிரிழந்தனர்.

கொடைக்கானலைச் சேர்ந்த வெள்ளிங்கிரி மகன் ராமர் (27). இவர் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். புதன்கிழமை இரவு இவர் உடுமலைப்பேட்டையிலிருந்து பழனி நோக்கி இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். சாமிநாதபுரம் அருகே சென்ற போது, பழனியிலிருந்து உடுமலைப்பேட்டை நோக்கிச் சென்ற லாரி இவரது வாகனம் மீது மோதியது. இதில் இவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சாமிநாதபுரம் போலீஸார் உடலை மீட்டு கூறாய்வுக்காக பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மற்றொரு விபத்து: பழனி புது நகரைச் சேர்ந்த பன்னீர்செல்வம் மகன் சுதாகர் (24). இவரும், இவரது நண்பர்களான இந்திரா நகரை சேர்ந்த ஞானவிக்னேஷ் (24), சத்யா நகரைச் சேர்ந்த அருண்குமார் (21) ஆகியோரும் கொடைக்கானல் சாலையில் உள்ள வரதமாநதி அணைக்கு இரு சக்கர வாகனத்தில் புதன்கிழமை சென்றனர். மாலையில் மூவரும் பழனி நோக்கி வந்து கொண்டிருந்தனர். இரு சக்கர வாகனத்தை சுதாகர் ஓட்டினார். வழியில் ஒரு சாலை வளைவில் திரும்பிய போது, எதிரே வந்த சரக்கு வாகனத்துடன் மோதியதில் சுதாகர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்ற இருவரும் பலத்த காயமடைந்தனர். பழனி அடிவாரம் போலீஸார் இருவரையும் மீட்டு பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேடசந்தூர்: திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வ.உ.சி. நகரைச் சேர்ந்தவர் தண்டபாணி (55). இவர், ஆத்துமேடு பகுதியில் கடந்த புதன்கிழமை நடந்து சென்றுகொண்டிருந்தபோது, அந்த வழியாக கெண்டையகவுண்டனூரைச் சேர்ந்த சவடமுத்து (38) ஓட்டி வந்த ஆட்டோ மோதியதில் பலத்த காயமடைந்தார்.

இவர், திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தீவிர சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். எனினும், அங்கு அவர் உயிரிழந்தார். இதுகுறித்து வேடசந்தூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

'புதிய தமிழகம் கட்சித் தலைவர் பொதுத் தொகுதியில் போட்டியிட வேண்டும்'

திண்டுக்கல், ஆக.29: பட்டியலினத்திலிருந்து வெளியேற விரும்பும் புதிய தமிழம் கட்சித் தலைவர் கே.கிருஷ்ணசாமி, பொதுத் தொகுதியில் போட்டியிட வேண்டும் என ஆதித் தமிழர் கட்சியின் மாநிலத் தலைவர் கு.ஜக்கையன் தெரிவித்தார்.

அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழக்கில் உச்சநீதமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு வரவேற்புத் தெரிவித்து, திண்டுக்கல்லில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், வியாழக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அருந்ததியர் உள் ஒதுக்கீடு எங்களுக்குக் கிடைத்த வெற்றி. உள் ஒதுக்கீடு செல்லும் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, விளிம்பு நிலை மக்களுக்கான சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

இந்த இட ஒதுக்கீட்டை எதிர்த்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோர் பேசி வருகின்றனர்.

உள் ஒதுக்கீடு பெற துணை நின்ற திமுக அரசுக்கு சென்னையில் பாராட்டு விழா நடத்த இருக்கிறோம். சமூக எதார்த்த வாழ்வியலை எடுத்துரைக்கும் வாழை திரைப்படத்துக்கு தேசிய விருது வழங்க வேண்டும். இந்தத் திரைப் படத்தை பள்ளிகளில் மாணவர்களுக்கு தமிழக அரசு திரையிட வேண்டும்.

பட்டியலினத்திலிருந்து வெளியேற விரும்பும் புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி, பொதுத் தொகுதியான திருநெல்வேலியில் போட்டியிட வேண்டும் என்றார் அவர்.

பாலியல் தொல்லை: இளைஞருக்கு 10 ஆண்டுகள் சிறை

திண்டுக்கல், ஆக. 29: பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில், இளைஞருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து திண்டுக்கல் நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

திண்டுக்கல் மாவட்டம், தாண்டிக்குடி அருகேயுள்ள மங்களங்கொம்பு பகுதியைச் சேர்ந்தவர் த.புருஷோத்தமன் (23). இவர், இதே பகுதியைச் சேர்ந்த 19 வயது பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதன்பேரில், கொடைக்கானல் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து, புருஷோத்தமனைக் கைது செய்தனர்.

இந்த வழக்கு திண்டுக்கல் மகளிர் விரைவு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. இதில் புருஷோத்தமனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.7 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி ஜி.சரண் தீர்ப்பளித்தார்.

போக்சோ வழக்குகளில் 2 பேருக்கு ஆயுள் தண்டனை

திண்டுக்கல், ஆக. 29: இருவேறு போக்சோ வழக்குகளில் இரு இளைஞர்களுக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்து, திண்டுக்கல் நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு அருகேயுள்ள கணவாய்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் மகேந்திரன் (33). கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இதே பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை திருமணம் செய்து, பாலியல் தொல்லை கொடுத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் மகேந்திரனை கைது செய்தனர்.

இந்தவழக்குதிண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. இதில் மகேந்திரனுக்கு ஆயுள் சிறைத் தண்டனையும், ரூ.ஒரு லட்சம் அபராதமும் விதித்து விசாரணை முடிவடைந்தநிலையில், நீதிபதி வேல்முருகன் தீர்ப்பளித்தார்.

மற்றொரு வழக்கு: திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகேயுள்ள அணைப்பட்டியைச் சேர்ந்தவர் குபேந்திரபாண்டி (24). கூலித்தொழிலாளியான இவர், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு 16 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகப் புகார் எழுந்தது. இதன்பேரில், நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து, குபேந்திரபாண்டியனைக் கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், குபேந்திரபாண்டிக்கு ஆயுள் சிறைத் தண்டனையும், ரூ.1.05 லட்சம் அபராதமும் விதித்து நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டார்.

பெண்ணை மிரட்டி பணம் பறிப்பு: இளைஞர் கைது

தேனி,ஆக.29: தேனியில், பெண்ணை கைப்பேசியில் ஆபாசமாக படம் பிடித்து மிரட்டி ரூ. 40 லட்சத்தை பறித்ததாக இளைஞரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

தேனி, சிவராம் நகரைச் சேர்ந்த ராமர் மகன் ராஜமாணிக்கம் (34). இவர் தன்னுடன் பழகிய பெண்ணை கைப்பேசியில் ஆபாசமாக படம் பிடித்து மிரட்டி கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் பல்வேறு தவணைகளில் மொத்தம் ரூ.40 லட்சத்தை பறித்தார். மேலும் தொடர்ந்து அந்தப் பெண்ணை மிரட்டி வந்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அந்தப்பெண் அளித்த புகாரின் பேரில் தேனி காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து ராஜமாணிக்கத்தை கைது செய்தனர்.

போடி ஆரோக்கிய அன்னை தேவாலயத் திருவிழா தொடக்கம்

போடி, ஆக. 29: தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் பழைய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத் திருவிழா வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முன்னதாக போடிநாயக்கனூர் தேவாலய தெருவில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத்திலிருந்து ஆரோக்கிய அன்னையின் உருவம் பொறித்த கொடியை திரளான கிறிஸ்தவர்கள் பவனியாக எடுத்து வந்தனர். பிறகு, புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் கொடிமரத்தின் முன் அந்தக் கொடி புனிதப்படுத்தப்பட்டது. தொடர்ந்து வாண வேடிக்கைகள் முழங்க கொடியேற்றம் நடைபெற்றது. பங்குத்தந்தையர்களுக்கு பாரம்பரிய முறைப்படி தீபங்கள் ஏந்தி பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது. பிறகு, பங்குத்தந்தையர்கள் குத்துவிளக்கேற்றி கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர். விழாவின் முக்கிய நிகழ்வான தேர்பவனி வருகிற செப். 7-ஆம் தேதி நடைபெறுகிறது.

விழா நாள்களின் போது தினமும் மாலையில் ஜெபமாலையும், மறையுரையுடன் சிறப்புத் திருப்பலியும் நிறைவேற்றப்படுகிறது.

போடி பழைய பேருந்து நிறுத்தம் அருகே அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் பங்கேற்றோர். (உள்படம்) புனித ஆரோக்கிய அன்னை.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref.: RO/SAR/SN/75/2024-25 தேதி: 27.08.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ். பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர் / இணை கடன்தாரர் / உத்திரவாதி:
1) திரு. K.பிரபாகரன், [M/s.வேணி ஏஜென்ஸீஸ் உரிமையாளர்], பதிவு அலுவலகம்: M/s.வேணி ஏஜென்ஸீஸ், எண்.29/2, சந்தநரபாண்டியன் தெரு, போடிநாயக்கனூர்-625513.
2) திருமதி.J.கிருஷ்ணவேணி, W/o.K.பிரபாகரன், கதவு எண்.7/12, பெரியாண்டவபுரம், கிழக்கு சந்து 2, போடிநாயக்கனூர்-625513

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., போடிநாயக்கனூர் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) / உத்திரவாதி(கள்) ஆகியோர் 26.08.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்., போடிநாயக்கனூர் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.14,79,957.16-ஐ (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தேழு மற்றும் பைசா பதினாறு மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 09.10.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர்/உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்:	ஜட்டம் எண்.1 - திரு. K.பிரபாகரன் ஜட்டம் எண்.2 - திருமதி.J.கிருஷ்ணவேணி,

சொத்து விபரம்: ஜட்டம் எண்.1: தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட போடிநாயக்கனூர் சர்வே வார்டு எண்.2-ல் அமைந்துள்ள T.S. No.3916-ஐ கொண்ட 185.5 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதில் கதவு எண்.12A-ஐ கொண்ட கட்டிடத்துடன் அதிலுள்ள அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதிருக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு.K.பிரபாகரன் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, போடிநாயக்கனூர் Sub-D சார்பதிவகத்தில் 15.12.2004 அன்று பதிவுபெற்ற கிரையப்பத்திர எண்.3492/2004-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கு: SY.No.3915, மணி செட்டியார் சொத்து. தெற்கு: கிழக்கு மேற்கு ரோடு. கிழக்கு: B. ஜோதிமணி சொத்து. மேற்கு: B. ராம்தாஸ் மற்றும் B. உதயசங்கருடைய சொத்துக்கள்.

ஜட்டம் எண்.2: தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட போடிநாயக்கனூர் சர்வே வார்டு எண்.2-ல் அமைந்துள்ள T.S. No.3916-ஐ கொண்ட 198.75 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதில் கதவு எண்.12 (பழைய கதவு எண்.306)-ஐ கொண்ட கட்டிடத்துடன் அதிலுள்ள அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதிருக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திருமதி. J. கிருஷ்ணவேணி, என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, போடிநாயக்கனூர் Sub-D சார்பதிவகத்தில் 12.09.2000 அன்று பதிவுபெற்ற உயில்பத்திர எண்.2/2001-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கு: SY.No.3915, மணி செட்டியார் சொத்து. தெற்கு: கிழக்கு மேற்கு ரோடு. கிழக்கு: SY.No.3916, S.திலகர் சொத்து. மேற்கு: R.B. கிருஷ்ணன் சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட தொகை (ஜட்டம் எண்.1 & ஜட்டம் எண்.2-க்காக)	ரூ.34,27,000/- (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD) (ஜட்டம் எண்.1 & ஜட்டம் எண்.2-க்காக)	ரூ.3,42,700/- (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்)
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல தேதி மற்றும் நேரம்	09.10.2024 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	01.01.2018 முதல் 19.08.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகாரம் பெற்ற அலுவலர் (Ph.No.0452-2300205/9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், போடிநாயக்கனூர் கிளை மொபைல் எண். 9840398062 -ல் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்